# NSW HEALTH

## COVID-19 Key Points – Tuesday 28 September 2021

NSW GOVERNMENT

**நியூ சவுத் வேல்ஸ் ஹெல்த்-இலிருந்துவரும் 2021 செப்டம்பர் 28-க்கான கோவிட்-19 பற்றிய முக்கிய குறிப்புகள்**

- தடுப்பூசியின் விகிதத்தைப் பொறுத்தவரை, ஒரு மருந்தளவைப் பெறுவதில் 85.7%-ஐயும், இரண்டு மருந்தளவுகளையும் பெற்றுக்கொள்வதில் 60.5%-ஐயும், நியூ சவுத் வேல்ஸ் தற்போது எட்டியுள்ளது. சமூகத்தினராகிய உங்களுக்கு நன்றி.
- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணி நேரத்தில், 863 பேர் உள்ளூர் கோவிட்-19 நோய்த்தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர். பரிதாபகரமாக இன்னும் ஏழு பேர் இறந்துள்ளனர்.
- எங்கள் சமூகத்தைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான வழி, தடுப்பூசியைப் போட்டுக்கொள்வதுதான். தயவுசெய்து, எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக, உங்கள் தடுப்பூசிக்கு nsw.gov.au-இல் பதிவு செய்துகொள்ளுங்கள்.
- மார்பகத் திரையிடல் பரிசோதனைச் சேவைகள் (breast screening services) இப்போது நியூ சவுத் வேல்ஸ்-க்குத் திரும்புகின்றன என்பதை அறியத்தருவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.
- இன்று நள்ளிரவு, பைரன் (Byron) மற்றும் ட்வீட் ஷையர் (Tweed Shire) பகுதிகள் பொதுமுடக்கத்தில் இருந்து வெளிவரும்.
- தயவுசெய்து நோயறிகுறிகளைத் தொடர்ந்தும் கண்காணியுங்கள், பொதுச் சுகாதார ஆலோசனைகளுக்குக் கவனம் செலுத்துங்கள், மற்றும் பரிசோதனையைச் செய்துகொள்ள முன் வாருங்கள். உங்கள் பகுதியில் உள்ள கட்டுப்பாடுகளை அறிந்துவைத்திருப்பதைத் தயவுசெய்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்: https://www.nsw.gov.au/covid-19/rules
- உள்ளூர் நோய்த்தொற்றாளர்கள் அதிகரித்து வருவதால், போர்ட் மக்வாரி (Port Macquarie), கெம்ப்சி (Kempsey) மற்றும் மஸ்வெல்ப்ரூக் (Muswellbrook) ஆகிய பகுதிகளை, 'நியூ சவுத் வேல்ஸ் ஹெல்த்' மிகவும் உன்னிப்பாகக் கவனித்துவருகிறது. குடியிருப்பாளர்களை மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம்.
- மேற்கு மற்றும் தென்மேற்கு சிட்னியில் நாங்கள் சிறந்த முன்னேற்றங்களைக் கண்டுள்ளோம், ஆனால் தொடர்ந்தும் ஓபர்ன் (Auburn), பஞ்ச்பௌல் (Punchbowl), கிரீனேக்கர் (Greenacre), கில்ட்ஃபோர்ட் (Guildford), பாங்க்ஸ்டவுன் (Bankstown), பென்ரித் (Penrith), மெரிலாண்ட்ஸ் (Merrylands) மற்றும் பிளாக்டவுன் (Blacktown) ஆகியவை கவலைக்கிடமான புறநகர்களாக இருந்துவருகின்றன. வெலிங்டன் (Wellington)-இல் வசிப்பவர்களை, நோயறிகுறிகள் தொடர்பாக விழிப்புடன் இருக்குமாறு நாங்கள் ஊக்குவிக்கிறோம்.
- தடுப்பூசியைப் போட்டுக்கொள்வதுதான், இந்த நோய்த்தொற்றுப் பரவலில் இருந்து விடுபடுவதற்கான எமது வழி ஆகும். நாங்கள் ஒன்றுபட்டால், எமது தடுப்பூசி மருந்துப் பாதுகாப்பைக்கொண்டு நாம் உலகை வழிநடத்தலாம்.